பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

18 08 2025 MONDAY 12.40 PM

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால் இரு அவைகளின் நடவடிக்கைகளும் பிற்பகல் இரண்டு மணிவரை ஒத்திவைக்கப்பட்டன.
2. குடியரசு துணைத்தலைவர் பதவிக்கு வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள திரு சி பி ராதாகிருஷ்ணனுக்கு பல்வேறு கட்சிகளும் ஆதரவு தெரிவித்து வருகின்றன.
3. போலியான பூச்சிக்கொல்லிகள் மற்றும் ரசாயன உரங்களை தயாரிக்கும் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
4. ஜம்மு காஷ்மீரில் பெய்துவரும் கனமழை காரணமாக பள்ளிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.
5. பங்களாதேஷில் வெங்காய விலை உயர்வை கட்டுப்படுத்தும் நோக்கில், இந்தியாவிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்ய அந்நாட்டு இடைக்கால அரசு அனுமதி அளித்துள்ளது.

<<<<<<>>>>>

பீகார் மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் அமளியில் ஈடுபட்டதால், இரு அவைகளின் நடவடிக்கைகளும் பிற்பகல் இரண்டு மணிவரை ஒத்திவைக்கப்பட்டன.

மாநிலங்களவையிலும், மக்களவையிலும் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதுகுறித்து விவாதிக்க அனுமதி கோரியிருந்தனர்.

இதற்கு அனுமதி மறுக்கப்பட்டதையடுத்து முதலில் நண்பகல் 12 மணிவரையிலும், பின்னர் பிற்பகல் 2 மணிவரையிலும் இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

<<<<<<>>>>>

குடியரசு துணைத்தலைவர் பதவிக்கு வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள திரு சி பி ராதாகிருஷ்ணனுக்கு, எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி ஆதரவு அளிக்க வேண்டும் என்று சிவ்சேனா கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் திருமதி பிரியங்கா சதுர்வேதி கூறியுள்ளார்.

அனைத்து கட்சிகளாலும் நன்மதிப்பு பெற்ற திரு சி பி ராதாகிருஷ்ணன், குடியரசு துணைத்தலைவர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள் நடைபெறும் என்று நம்புவதாக அவர் கூறியுள்ளார்.

எனினும், இந்த கருத்து சிவ்சேனா தலைமையின் பரிந்துரைக்கு உட்பட்டது என்று அவர் தெரிவித்துள்ளார்.

பாரபட்சம் அற்ற முறையில் திரு சி பி ராதாகிருஷ்ணன் நடந்து கொண்டால் நாடாளுமன்ற அவையின் பாரம்பரியத்திற்கு அது வலுசேர்க்கும் என்று காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு Sukhdev Bhagat கூறியுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் உள்ள 786 உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டும்.

394 வாக்குகள் கிடைக்கும்பட்சத்தில் வெற்றி வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் நாடாளுமன்றத்தின் மக்களவையில் 293 உறுப்பினர்கள் உள்ளனர்.

மாநிலங்களவையில் 129 உறுப்பினர்கள் உள்ளனர்.

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி சார்பில் இரு அவைகளிலும் 300 உறுப்பினர்கள் உள்ளனர்.

சமாஜ்வாதி கட்சித்தலைவர் திரு ராம்கோபால் யாதவ், குடியரசு துணைத்தலைவர் நியமனம் தொடர்பாக எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி சார்பில் ஒருமித்த முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இந்நிலையில், இக்கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் குறித்த முடிவு விரைவில் அறிவிக்கப்படும் என்று காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் திரு கே சி வேணுகோபால் கூறியுள்ளார்.

கூட்டணி கட்சிகளுடன் ஆலோசனை நடத்தியபின்னர் இறுதி முடிவு அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இக்கூட்டணி சார்பில் அறிவிக்கப்படும் வேட்பாளருக்கு ஆதரவு வழங்கப்படும் என்று திமுக அறிவித்துள்ளது.

இந்நிலையில், இன்று மாலை எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி சார்பில் வேட்பாளர் அறிவிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தை சேர்ந்த திரு சி பி ராதாகிருஷ்ணன், குடியரசு துணைத்தலைவர் வேட்பாளராக போட்டியிடுவது வரவேற்கத்தக்கது என்றும் திமுக இந்த வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்றும் அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தை சேர்ந்த மகாராஷ்ட்ர ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன், தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது என்று கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

கட்டுமான தொழில் நிறுவனங்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யும் பொருட்களை அதிக அளவில் பயன்படுத்த வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கேட்டுக்கொண்டுள்ளார்.

ஹைதராபாதில் இன்று கட்டுமான தொழில் நிறுவன சங்கங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த கண்காட்சியை பார்வையிட்ட அவர், உள்நாட்டிலேயே சர்வதேச தரத்திற்கு ஏற்ப கட்டுமானப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதாக தெரிவித்தார்.

கட்டுமானத் தொழிலை ஊக்குவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

வீடுகளை கட்டித்தருவதில் எவ்வித சமரசத்திற்கும் இடமளிக்காமல் தரமான வீடுகளை நுகர்வோருக்கு கட்டித்தர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

போலியான பூச்சிக்கொல்லிகள் மற்றும் ரசாயன உரங்களை தயாரிக்கும் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலத்தில் தரமற்ற பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன்படுத்தப்பட்டதால் சோயாபீன் பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள சேதம் குறித்து ஆய்வு செய்வதற்காக அம்மாநிலத்திற்கு சென்றுள்ள திரு சௌகான், Raisen மற்றும் Vidisha மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள சேதங்களை பார்வையிட்டார்.

அப்போது விவசாயிகளை சந்தித்து பேசிய அவர், போலியான பூச்சிக்கொல்லி மருந்துகள் குறித்த விழிப்புணர்வு நாடு முழுவதும் ஏற்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

திரு சௌகானின் உத்தரவின்பேரில் போலி பூச்சி மருந்துகள் மற்றும் உரங்கள் தயாரிப்பு குறித்து ஆய்வு செய்வதற்கு இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் விசாரணைக்குழு ஒன்றை அமைத்துள்ளது.

மத்தியப்பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட சோயாபீன் பயிர்களை பார்வையிட்டு பயிர் சேதம் குறித்தும் அவர்கள் மதிப்பீடு செய்வார்கள் என்று எமது போபால் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

சட்டீஸ்கர் மாநிலம் பிஜப்பூர் மாவட்டத்தில் உள்ள Bastar வனப்பகுதியில் நக்சலைட்டுகள் நடத்திய தாக்குதலில் பாதுகாப்புப்படை வீரர் ஒருவர் வீர மரணமடைந்தார். மேலும், மூன்று வீரர்கள் காயமடைந்தனர்.

தேசிய பூங்கா பகுதியில் பாதுகாப்புப்படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது நக்சலைட்டுகள் மேற்கொண்ட குண்டுவெடி தாக்குதலில் பாதுகாப்புப்படை வீரர் உயிரிழந்தார்.

காயமடைந்த மூன்று வீரர்களும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

<<<<<<>>>>>

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்துவரும் கனமழை காரணமாக தென்காசி மாவட்டத்தில் உள்ள அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இம்மாவ்டத்தில் உள்ள நீர்த்தேக்கங்களும் நிரம்பியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரின் பல பகுதிகளில் கனமழை பெய்துவருகிறது.

இதனையடுத்து, ஜம்மு மண்டலத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை வரை ஜம்மு காஷ்மீரின் பல பகுதிகளில் கனமழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்ததையடுத்து பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

சில இடங்களில் பெருமழையால் வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு ஏற்படக்கூடும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சில பகுதிகளில் பெரிய கற்கள் பெயர்ந்து விழக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மைய எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு, ரியாசி, உதம்பூர், ரஜோரி, பூஞ்ச், சம்பா, கத்துவா ஆகிய பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றும் கூறப்பட்டுள்ளது.

தோடா, கிஷ்துவர், ராம்பன் உள்ளிட்ட பகுதிகளில் பலத்த காற்றுடன் மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர்நிலைகளுக்கு அருகேயும், மண் சரிவு ஏற்படும் பகுதிகளுக்கும் மக்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

சுற்றுலாப்பயணிகள், வாகன ஓட்டுநர்கள் மற்றும் மலையேற்றத்தில் ஈடுபடும் வீரர்கள் உள்ளிட்டோர் வானிலையில் ஏற்படும் மாற்றத்தை நன்கு கவனித்து பயணத்தை திட்டமிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

<<<<<<>>>>>

பங்களாதேஷில் வெங்காய விலை உயர்வை கட்டுப்படுத்தும் நோக்கில், இந்தியாவிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்ய அந்நாட்டு இடைக்கால அரசு அனுமதி அளித்துள்ளது.

கடந்த ஐந்து மாதங்களுக்கு மேல் வெங்காயம் விலை அந்நாட்டில் கடுமையாக உயர்ந்துவருவதையடுத்து வர்த்தகர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று அந்நாட்டு அரசு இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

முதல்கட்டமாக 150 டன் வெங்காயம் பங்களாதேஷில் உள்ள Hili துறைமுகத்தை நேற்று சென்றடைந்தது.

மேலும், 660 டன் வெங்காயம் சோனாமஸ்ஜித் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பங்களாதேஷில் உள்நாட்டு வெங்காய உற்பத்தி குறைந்ததையடுத்து, அதன் விலை கடுமையாக உயர்ந்தது.

<<<<<<>>>>>

இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் அண்மையில் பெய்த கனமழையால் உயிரிழந்தோருக்கு ஐ நா பொதுச்செயலாளர் திரு அன்டோனியோ குட்ரஸ் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

சொந்தங்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அந்தந்த நாட்டு அரசுகள் செய்துதர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<END>>>>>